இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 11-07-2023

# குற்றப்பத்திரிக்கை - 1

ஆளுநர் ஆர்.என்.ரவியின் அதிகார அத்துமீறல்கள் குறித்து குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ளது கடிதம் அல்ல, குற்றப்பத்திரிக்கை!

இப்படி எழுதலாமா, முன்னுதாரணம் இருக்கிறதா என்றெல்லாம் சிலர் கேட்கத் தொடங்கி இருக்கிறார்கள். **"ராஜ்பவனில் போட்டி அரசு நடத்தும் ஆளுநர், மாநில நிர்வாகத்தை சீர்குலைக்கும் கருவியாக ராஜ்பவனை மாற்றியுள்ளார். ஆளுநர் பதவிக்கான கண்ணியத்தை அவர் இழந்துவிட்டார். மாநில அரசையும் கூட்டாட்சி அமைப்பையும் வலுவிழக்கச் செய்யும் ஆளுநரை திரும்பப்பெற வேண்டும்" - என்று சொன்னவர் 2011 ஆம் ஆண்டு குஜராத் முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி தான். எனவே முன்னுதாரணம் இருக்கிறது. மோடிதான் அந்த முன்னுதாரணம்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பியுள்ள குற்றப்பத்திரிக்கை மிகமிகத் தெளிவானது. வெளிப்படையானது. சட்டபூர்வமானது.

1. ஆளுநர் என்பவர், முக்கியமான அரசியலமைப்பு கடமைகளைச் செய்பவராகவும், பாரபட்சமற்றவராகவும், அப்பழுக்கற்ற நேர்மையான நபராகவும் இருக்க வேண்டும். அரசியல் சாசனத்தின் மீதும், அது பிரதிநிதித்துவப்படுத்தும் கொள்கைகள் மீதும் ஆளுநருக்கு முழு நம்பிக்கை இருக்க வேண்டும். ஆனால் அப்படிப்பட்டவராக ஆளுநர் ஆர்.என்.ரவி இல்லை.

2. இந்தியா ஒரு இறையாண்மைமிக்க, சோசலிச, மதச்சார்பற்ற, ஜனநாயக குடியரசு நாடு. இந்த அடிப்படைக் கொள்கைகளில் ஏதேனும் ஒன்றில் நம்பிக்கை இல்லாத ஆளுநர், அரசியலமைப்பு பதவியை வகிக்கத் தகுதி அற்றவர்.

3. அரசியல்வாதியாக மாறும் ஒரு ஆளுநர், அப்பதவியில் தொடரவே கூடாது.

4. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் கொள்கை, செயல்பாடுகள், முடிவுகளுக்கு சவால் விடும் வகையில் அவர் செயல்படுகிறார்.

5. சட்டமன்றம் நிறைவேற்றும் சட்டமுன் வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதில் தேவையற்ற காலதாமதம் செய்து முட்டுக்கட்டை போடுகிறார்.

6. 2021 செப்டம்பரில் தமிழ்நாடு ஆளுநராக அவர் பொறுப்பேற்றது முதல், சட்டபூர்வமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசுடன் கருத்தியல் மற்றும் அரசியல் போரில் ஈடுபட்டு வருகிறார்.

7. ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் மக்களுக்குச் சேவை செய்வதைத் தடுத்து வருகிறார்.

8. ஊழல் புரிந்த முன்னாள் அ.தி.மு.க., அமைச்சர்கள்மீது வழக்கு தொடர அனுமதி வழங்குவது தொடர்பான கோப்புகளை ஆளுநர் கிடப்பில் போட்டுள்ளார்.

9. பி.வி.ரமணா @ பி.வெங்கட்ரமணா - முன்னாள் பால்வளத் துறை அமைச்சர் - கோப்பு எண் AC/495/2022, நாள் 12.9.2022 என்ற கோப்பை கிடப்பில் போட்டுள்ளார்.

10. சி. விஜயபாஸ்கர் - முன்னாள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் - கோப்பு எண் AC/495/2022, நாள் 12.9.2022 என்ற கோப்பை கிடப்பில் போட்டுள்ளார்.

11. கே.சி. வீரமணி - முன்னாள் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் - கோப்பு எண் AC/454/2021, நாள் 12.9.2022 என்ற கோப்பை கிடப்பில் போட்டுள்ளார்.

12. எம்.ஆர்.விஜயபாஸ்கர் - முன்னாள் போக்கு வரத்துத் துறை அமைச்சர் -கோப்பு எண் AC/351/2021, நாள் 15.5.2023 என்ற கோப்பை கிடப்பில் போட்டுள்ளார்.

13. ஆளுநர் தனிப்பட்ட முறையில், தனது அரசியல் மற்றும் மதக் கருத்துகளைத் தொடர்ந்து பொது வெளியில் தெரிவித்து வருவது, அவர் வகிக்கும் ஆளுநர் பதவிக்கு மிகவும் பொருத்தமற்றது.

14. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கு சங்கடத்தை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சட்டப்படி நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது அவமதிப்பு, வெறுப்பு, அதிருப்தி மற்றும் தவறான எண்ணத்தைத் தூண்ட முயல்கிறார்.

15. இந்த நாட்டின் மதச்சார்பற்ற கொள்கைகளில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை அடிக்கடி தனது பிளவுபடுத்தும் பேச்சுகளின் மூலம் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகிறார்.

16. "உலகின் பிற பகுதிகளைப் போலவே இந்தியாவும் ஒற்றை மதத்தைச் சார்ந்துள்ளது" என்று அவர் சொல்வது இந்திய அரசியலமைப்பை அவமதிக்கும் செயலாகும்.

17. திருக்குறளை வகுப்புவாதப்படுத்துகிறார்.

18. தமிழ் மக்களையும், பண்பாட்டையும், இலக்கியத்தையும், திராவிடக் கருத்தியலையும், அரசியலையும் இழிவுபடுத்தும் வகையில் தொடர்ந்து பேசி வருகிறார்.

19. திராவிட அரசியல் பிற்போக்குத்தனமானது என்று அவர் சொல்வது அவதூறு மட்டுமல்ல, அவரது அறியாமை ஆகும்.

20. கூட்டாட்சித் தத்துவம் என்றால் என்ன என்றே அவருக்குத் தெரியவில்லை.

21. இலக்கியம் மக்களுக்கு மிக மோசமாக போதிக்கப்பட்டுள்ளது என்று சொல்வதன் மூலமாக தமிழ் இலக்கியங்களை அவமானப்படுத்துகிறார்.

22. தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் "தமிழ்நாடு" என்ற பெயரை சிதைக்க நினைக்கிறார்.

23. இவர் தமிழர் நலனுக்கு எதிரானவர்.

24. தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழர் பண்பாடு ஆகியவற்றின் மீது விவரிக்க முடியாத, ஆழமாக வேரூன்றிய பகைமை கொண்டவராக இருக்கிறார்.

25. அவரது சொற்களும், பேச்சுகளும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை செயல்படவிடாமல் தடுப்பது மட்டுமல்லாமல், சட்டத்தால் நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மீது வெறுப்பு, அவமதிப்பு மற்றும் அதிருப்தியையும் அவர் தூண்டுகிறார்.

- தொடரும்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.7.2023) தலைமைச் செயலகத்தில், அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வினை கட்டுப்படுத்துவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் முனைவர் டி.ஜகந்நாதன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையர் வே.ராஜாராமன், வேளாண்மை ஆணையர் டாக்டர் எல்.சுப்பிரமணியன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் என்.சுப்பையன், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் முனைவர் ச.நடராஜன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர்.பிருந்தா தேவி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2500 கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள

# ரூ.50 கோடி: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

## சட்டமன்றத்தில் வெளியான அறிவிப்பு நிறைவேற்றம்!

சென்னை, ஜூலை 11-

1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.2 இலட்சம் வீதம் ரூ.50 கோடிக்கான வரைவோலைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.7.2023) தலைமைச் செயலகத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 2022 - 2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 20 திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் திருக்கோயில் திருப்பணிகள் மேற்கொள்ள வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறை தனது கட்டுப்பாட்டிலுள்ள தொன்மைவாய்ந்த திருக்கோயில்களை பழமைமாறாமல் புனரமைத்து குடமுழுக்கு நடத்துதல், திருக்குளத் திருப்பணி, திருத்தேர் திருப்பணி மற்றும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மேலும் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ஏற்கனவே தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்" எனவும், "கிராமப்புறத் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்படி கிராம பகுதிகளில் அமைந்துள்ள 1,000 திருக்கோயில்களின் திருப்பணிக்காக ஏற்கனவே தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு முதல் 1,250 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் மேற்கொள்ள தலா 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்காக ரூபாய் 25 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்" எனவும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில், முதலமைச்சர் அவர்கள் கடந்த 5.1.2023 அன்று சென்னை, வில்லிவாக்கத்தில் 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள ரூ.2 இலட்சம் வீதம் ரூ.50 கோடிக்கான வரைவோலைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, 2022-2023 ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 50 கோடி ரூபாய்க்கான வரைவோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அந்தந்த திருக்கோயில்களின் நிர்வாகிகள் மற்றும் பூசாரிகளிடம் வழங்கினார். இதன்மூலம் அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்கள் மட்டுமின்றி, கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில்களிலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு புதுப்பொலிவு பெற்றிடும்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா. பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், 1 இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர் அ.சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அனைத்துத் துறை அலுவலர்களுடன் - அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு!

*கோவை, ஜூலை 11-*

*கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 08.07.2023 அன்று மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கு.சண்முகசுந்தரம், மாநகராட்சி மேயர் திருமதி. கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் மு.பிரதாப், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா, மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் (பொ) / மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் செல்வம், தூய்மைப் பணியாளர் நலவாரிய மாநில துணைத் தலைவர் திருமதி. கனிமொழி பத்மநாபன், வருவாய் கோட்டாட்சியர் (வடக்கு) கோவிந்தன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி. மு.கோகிலா, தனித் துணை ஆட்சியர் / சமூக பாதுகாப்புத் திட்டம் சுரேஷ், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் பார்த்திபன், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) துவாரகநாத்சிங், மாவட்ட வழங்கல் அலுவலர் குணசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) கமலகண்ணன், மாநகராட்சி துணை ஆணையாளர் சிவக் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்ததாவது : -*

*முதலமைச்சர் அவர்கள் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்கள். நம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை, அப்பணிகளை விரைந்து முடிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாவட்டத்தின் வளர்ச்சிக்கு தேவையான புதிய திட்டப்பணிகள் உள்ளிட்டவைகள் குறித்து அனைத்து துறைசார்ந்த அலுவலர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது. மேலும், இக்கூட்டத்தில் அலுவலர்களின் கருத்துக்களும், கோரிக்கைகளும் கேட்டறியப்பட்டுள்ளது. இதுதொடர்பாக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

*உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்களிடம் வந்து கோரிக்கை வைக்கும்போது அவர்களின் நியாமான பொது கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டப்பணிகள் முன்னேற்ற நிலைகள் குறித்து மாதம் ஒருமுறை அந்தந்த துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மக்களின் பொதுவான விரைந்து தீர்க்கக்கூடிய சிறிய பிரச்சினைகளுக்கான கோரிக்கைகளுக்கு அரசு அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.*

*வால்பாறையில் அதிக மழை பெய்ததால் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மழையினால் தண்ணீர் அதிகமானஅளவு வந்தாலும் எவ்வித ஆபத்தும் இல்லாதவகையில், அதனை சரிசெய்யும் அளவிற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*வீட்டுவசதி வாரியம் சார்பில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. வீட்டு உரிமையாளர்கள் தகுந்த ஆவணங்கள் கொண்டு வரும்போது விரைந்து வீடுகள் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*கோயம்புத்தூர் மாவட்டம் மற்ற அனைத்து மாவட்டங்களைவிட வளர்ச்சி அடைந்த மாவட்டமாக உள்ளது. ஒரு மாவட்டம் முன்னேற்றமடையவேண்டும் என்றால் அரசுத் துறையில் பணியாளர்கள் முதல் உயர் அலுவலர்கள் வரை அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் நிச்சயமாக நன்றாக வளர்ச்சி அடையமுடியும். புதிய திட்டங்களை கொண்டுவருவதற்காக அனைத்து அரசுத்துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தெரிவித்தார்.*

*அதனைத்தொடர்ந்து, சமூக பாதுகாப்புத் திட்டத்தின் சார்பில் 50 பயனாளிகளுக்கு ரூ.6இலட்சம் மதிப்பில் முதியோர் உதவித் தொகையும், 50 பயனாளிகளுக்கு ரூ.1.19 கோடி மதிப்பில் இபட்டாக்களையும், 155 நபர்களுக்கு ரூ.1.30 கோடி மதிப்பில் முதலமைச்சரின் சாலை விபத்து நிவாரண நிதிகளையும், ஒரு பயனாளிக்கு ரூ.6,930 மதிப்பில் இலவச தையல் இயந்திரத்தையும் என 256 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.2.55 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.*

*நேற்று முன்தினம் மரணமடைந்த கோவை சரக டி.ஐ.ஜி. விஜயகுமார் அவர்களுக்கு இக்கூட்டத்தில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் தலைமையில், அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருநிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.*

### மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு

## ஒரு லட்சம் ரூபாய் மதிப்பில் நூல்கள்!

### முனைவர் ஆறு.அழகப்பன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 11 –

அண்ணாமலை பல்கலைக் கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் ஆறு.அழகப்பன், ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள நூல்களை, மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகத்துக்கு வழங்கியுள்ளார்.

அதன் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களிடம் அவர் சில நூல்களை வழங்கினார்.